நீங்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான பிரச்சினை என்று கேட்டால் நான் அனுமதிப்பேன்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: *என்னுடைய தொகுதிப் பிரச்சினைதான், முக்கியமானதுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக இந்த மாதிரி பிடிவாதமாகப் பேச வேண்டும் என்பது மிகவும் தவறு. நான் இன்றைக்கு மட்டும் நீங்கள் பேச அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். சரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட திருக்கண்ணபுரத்தில் இருக்கக்கூடிய அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோவிலுக்கு திருப்பணியைத் தொடங்கி அங்கே குடமுழுக்கு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் உங்களுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை சொல்கிறபோது இதற்கான பதிலை அப்போது வழங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் (குறுக்கீடு) ஒன்றுமில்லையா? நன்றி, அவ்வளவுதான்.*

6. கவன ஈர்ப்பு

(அ) எழும்பூர், 104–வது வார்டு, கங்காதீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

2018 ஜூன் 13]

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களுடைய கழகத்தின் செயல் தலைவர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

"எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள 104—வது வார்டிலுள்ள, கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் 1975 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டவை. அந்தக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104—வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெரு (பங்கஜம் தெரு) திட்டப் பகுதியில் 56 அடுக்குமாடிக் குடியிருப்புகள் (2 தொகுப்புகள்) நான்கடுக்கு மேம்பாட்டில் குடியிருப்பு ஒவ்வொன்றும் 326 சதுர அடி கட்டுமானப் பரப்பில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1974 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. இக்குடியிருப்புகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் ரூ.4.33 இலட்சம் செலவில் கீழே கூறப்பட்டுள்ள பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. குடியிருப்புகளைச் சுற்றிலும் கான்கிரீட் நடைபாதை அமைத்தல்

2. கழிவுநீர் குழாய்கள் பழுதுபார்த்தல்

3. வெளிப்புற சுவர் பூச்சு

4. கழிப்பறை பீங்கான்களை மாற்றுதல்

மேலும், 2016—2017 ஆம் ஆண்டில் ரூ.1.50 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன; மற்றும் பராமரிப்பு, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல்

பணிகளும் முறையாக அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையினை ஆய்வு செய்யவும், அக்குடியிருப்புகளை இடித்துவிட்டு, அவற்றை மீண்டும் கட்டவும் பரிந்துரை செய்ய தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைச் சார்ந்த பொறியாளர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழு அரசாணை (நிலை) எண் 97, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 15—5—2013—ல் கீழே கூறப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது:—

தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	தலைவர்
முனைவர் A.R. சாந்தகுமார், ஓய்வுபெற்ற பேராசிரியர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (I.I.T.)	உறுப்பினர்
சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்த மேற்பார்வைப் பொறியாளர்	உறுப்பினர்
சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்த நிருவாகப் பொறியாளர்	உறுப்பினர்

தற்போது இக்குடியிருப்புகளின் கட்டமைப்பு 13—3—2018 அன்று, எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, தொழில்நுட்ப ஆய்வறிக்கையின் அடிப்படையில் இக்குடியிருப்புகள் உறுதியான தன்மையில் இருப்பதால், இடித்து மீண்டும் புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். எழும்பூர் தொகுதி, 104—வது வட்டம், கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் 56 வீடுகள் கொண்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கடந்த 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதேபோல், 168 வீடுகள் கொண்ட ஆர்.கே. புரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதேபோல, 104—வது வட்டத்திலுள்ள

2018 ஜூன் 13] **[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்]**

ஓசோன்குளம் என்ற பகுதியில் 1970 ஆம் ஆண்டு 288 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல, 61—வது வட்டம், டாக்டர் சந்தோஷ் நகரில் 1975 ஆம் ஆண்டு 272 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல, 77—வது வட்டம், பி.கே. காலனி பகுதியில் 1974 ஆம் ஆண்டு 594 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல், எம்.எஸ். நகர் பகுதியில் 1972 ஆம் ஆண்டு 224 வீடுகள் கட்டப்பட்டன. வேம்புலி அம்மன் கோவில் தெருவில் 1972 ஆம் ஆண்டு 144 வீடுகள் கட்டப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடுகளெல்லாம் எங்களுடைய கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கட்டி முடிக்கப்பட்டன. விவர அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அந்த வீடுகளுக்குப் பல்வேறு பணிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்திருக்கின்றார்.*

அந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டதெல்லாம் மேல்பூச்சுதான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், make–up போட்டு வைக்கப்பட்டு இருக்கின்றது. ஒரு மழை பெய்தால் அந்த make–up உடனே கலைந்துவிடும். மேலே மழை பெய்தால் அந்த மழை நீர் உட்பகுதிக்கு வந்து அது தரை தளத்திற்கு வருகிறது. 4 மாடிகள் கொண்ட அந்த கங்காதீஸ்வரர் கோவில் தெருவிலுள்ள வீடுகளில், நான்காவது மாடியில் மழை பெய்தால் தரைத் தளத்திற்கு தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் அங்கு சென்று ஆய்வு செய்து, வெளிப்புறத்தைப் பார்த்துவிட்டு சுண்ணாம்பு அடித்துவிட்டு, அந்த வீடுகள் நன்றாக இருக்கின்றன என்று அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக நான் மேலே குறிப்பிட்ட எங்களுடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இருந்தபோது கட்டப்பட்ட அந்த வீடுகளை உடனடியாக இடித்துவிட்டு, புதிய வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—50

அதேபோல 61—வது வட்டத்திலுள்ள சந்தோஷ் நகர் பகுதியில் 1975 ஆம் ஆண்டு 272 வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகளில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு திருமணம் செய்து, ஏறக்குறைய

317 குடும்பங்கள் காலியாக இருக்கின்ற இடங்களில் சந்தோஷ் நகர் குடிசை மாற்று வாரிய பகுதிகளின் அருகிலேயே குடிசைகளில் குடியிருந்து வருகிறார்கள். சந்தோஷ் நகர் குடியிருப்பை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்டப்படும்பொழுது, குடிசைப் பகுதிகளில் இருக்கக்கூடிய அந்த குடிசைவாசிகளுக்கும் அதே இடத்தில் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பார்த்தால் என்னுடைய . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி கேட்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லா கேள்விகளையும் கேட்கிறீர்களா? (குறுக்கீடு) சரி கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, கேட்டுவிடுங்கள். நீங்கள்தான் அறிக்கையை படித்துவிட்டீர்களே! கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெரு திட்டப் பகுதியைப் பொறுத்தமட்டில், விவர அறிக்கையில் குறிப்பிட்டபடி, 56 அடுக்குமாடி குடியிருப்புகள், இரண்டு தொகுப்புகளாக, 4 அடுக்கு மேம்பாட்டில், குடியிருப்பு ஒவ்வொன்றும் 326 சதுர அடி கட்டுமானப் பரப்பில், 1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டன. மேலும், இக்குடியிருப்புகளில் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் ரூ.4.33 இலட்சம் செலவில் அனைத்து பழுது பார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளன. மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.1.5 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசுவது உள்பட பல்வேறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் make–up போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். Make–up எல்லாம் போட முடியாது. குடிசைப் பகுதிமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் உறுதித்தன்மை வாய்ந்த வீடுகளாக இன்று இருக்கின்றனவா, இல்லையா என்பதைக் கண்டறிய வாரியத்தின் மூலமாக பொறியாளர்கள் உள்ளடங்கிய தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேற்படி குடியிருப்புகளின் கட்டமைப்புகள் 13–3–2018 அன்று பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, அவை

உறுதியான தன்மையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குழுவினரோடு சென்று பார்த்திருக்கிறார்; அப்போது திருப்தியையும் தெரிவித்திருக்கிறார் என்ற நிலை இப்பொழுது இருக்கின்றது. எனவே, சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் அமைந்துள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளை தற்போது இடித்துவிட்டு மீண்டும் புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என ஆய்வறிக்கையில் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கு பல்வேறு பகுதிகள் அவருடைய சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கியுள்ளதாகச் சொல்லியிருக்கின்றார். குறிப்பாக எம்.எஸ். நகர் பகுதி. 224 வீடுகளைக் கொண்ட இந்தக் குடியிருப்பு 1971–1973 காலக்கட்டத்தில் கட்டப்பட்டது. 224 வீடுகளையும் தற்போது இடித்துவிட்டு, மறு கட்டுமானம் செய்யப்பட உள்ள பட்டியலில் அந்தக் குடியிருப்பு இருக்கிறது. மறு கட்டுமானம் செய்யப்படுகின்றபொழுது, 500 வீடுகளாக அது Vertical line*–ல் கட்டப்பட உள்ளது. கூடுதலாக 276 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.*

இன்னொன்று, சந்தோஷ் நகர் என்ற குடியிருப்புப் பகுதியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். 272 வீடுகள் கொண்ட இந்தக் குடியிருப்பு 1972–1975 காலகட்டத்தில் கட்டப்பட்டது. அந்தப் பகுதியில் 607 வீடுகளாகக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக 335 வீடுகள் அமைப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பக்கத்திலேயே குடிசைகளில் இருக்கின்ற அந்த மக்களை, இந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் மறு குடியமர்வு செய்கின்ற பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு மட்டுமல்லாமல், இன்றும் 4, 5 இடங்களைப் பற்றி தன்னுடைய கேள்வியின் மூலமாக சொல்லியிருக்கிறார். அந்த இடங்களையும் தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, உள்ளபடியே குடியிருப்பதற்கு தகுதியற்ற நிலை இருந்தால், அவற்றையும் மறு குடியமைப்பு செய்வதற்கு ஏதுவாக புதிய வீடுகளாகக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். விரிவான பதிலை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு* Colour washing *செய்வதை* makeup *போட்டதுபோல் மழையில் கரைந்துவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் சொன்னார்கள். ஆனால், அது கரையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தலையில் அடித்த* hair dye *மாதிரி எந்தக் குளியலுக்கும் தாங்கும், எந்த மழைக்கும் தாங்கும். (சிரிப்பு)*

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் முடி இருப்பவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அண்ணன் ஏன் அதைப் பற்றிப் பேசுகிறார் என்பது தெரியவில்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தோஷ் நகர் பகுதியில் வாழக்கூடிய குடிசைவாசிகளுக்கும், அதே இடத்தில் வீடுகளை ஒதுக்கித் தருவேன் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) போனது, வந்ததை எல்லாம் கேட்காமல், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். நேரம் போதாது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2018 ஜூன் 13]

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனது, வந்தது எல்லாம் இல்லை. அங்குள்ள நிலைமையைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதாவது, ஒரு நிமிடம், . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு விரிவான பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. மீண்டும், அவர் **பேசியது அவைக் குறிப்பில் இருக்கலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், விதி—55, அதாவது கவன ஈர்ப்பு குறித்து விவர அறிக்கையை ஏன் இந்த அவையில் வைக்கிறார்கள் என்றால், அதிலிருந்துதான் நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். அதில் இல்லாத பொருளைக் குறித்து, உங்கள் சௌகரியத்திற்கு கேட்டு, அதை* record *செய்தால் சரியாக இருக்காது. ஆகவே, அது அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது என்பதால், அது மட்டும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முதலில் கேட்ட கேள்வி முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு துணை முதலமைச்சரின் பதிலும் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லப்பட்ட காரணத்தினால், தயவுசெய்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த பகுதிக்கு நான் போகவேண்டும். உட்காருங்கள்.*

(ஆ) 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4 (A)—ஐ நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. மு. திராவிடமணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*